## பத்திரிக்கை செய்தி

## கடனளிப்பு சான்றிதழ் வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் தலைமையக துணை தாசில்தார் அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்தது

புகார்தாரர் திரு.சண்முகம் என்பவர் விழுப்புரம் மாவட்டத்தில் வசித்து வந்தார். புகார்தாரர் தனக்கு கடனளிப்பு சான்றிதழ் வேண்டி விழுப்புரம் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.எஸ்.பி.பாலகிருஷ்ணன், முன்னாள் தலைமையக துணை தாசில்தார், விழுப்புரம் தாலுகா அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடம் கடனளிப்பு சான்றிதழ் வழங்குவதற்கு தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கடலூர் பிரிவில் வழக்குபதிவு செய்யப்பட்டது. 15.10.2001 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதில் எதிரி, புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.1,000/-யை கேட்டு பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விழுப்புரம் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு 24.07.2014 அன்று எதிரி திரு.எஸ்.பி.பாலகிருஷ்ணனுக்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.1,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.1,000/- அபராதமும் விதித்து தண்டணையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. திரு.எஸ்.பி.பாலகிருஷ்ணன், முன்னாள் தலைமையக துணை தாசில்தார் தண்டனையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இன்று 20.03.2023 சென்னை உயர்நீதிமன்றம் கீழ் நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து தண்டனையை உறுதி செய்தது.

## PRESS NOTE

## Former Deputy Tahsildar conviction in bribe case withheld by Hon’ble High Court of Madras

In 2001, the complainant Tr.Shanmugam of Villupuram District had applied for issue solvency certificate at Villupuram Taluk Office, Villupuram district. Tr.S.P.Balakrishnan, Former Headquarters Deputy Tahsildar, Villupuram Taluk office, Villupuram district, had demanded Rs.1,000/- as bribe for processing his application. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti–Corruption, Cuddalore Detachment. In this connection a trap was organized. On 15.10.2001 trap was laid against the accused and the accused was caught red-handed while demand and acceptance of bribe money Rs.1,000/- from the complainant. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was tried before the Spl. Court for PC Act, Cases, Villupuram. On 24.07.2014 Special Court pronounced the judgment against Tr.S.P.Balakrishnan, Headquarters Deputy Tahsildar as convicted for 1 year Rigorous Imprisonment and with fine Rs.1,000/- u/s 7 and concurrently 1 year Rigorous Imprisonment and with fine Rs.1,000/- u/s.13(2) & 13(1)(d) of the Act. Both the sentences were ordered to run concurrently. Tr.S.P.Balakrishnan, had appealed against the conviction and filed Criminal appeal at High Court of Madras. Today 20.03.2023 the High Court of Madras accepted the lower court’s order and dismissed the appellant’ appeal.